**தலைப்பு - 329 தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கட்டுநிதியை விட அதிக பெறுமதி கோரப்பட்டிருந்ததுடன் கிடைக்கப்பெற்று இருந்த அளவு திட்டமிடப்பட்டிருந்த அளவில் அரைவாசியாக காணப்பட்டது. | பெரும்பாலான பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதுடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கட்டுநிதி திட்டத்தினை முறையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். |

**2.2. செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 06 செலவின விடயங்களுக்காக ஆரம்ப மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடான ரூபா 2,964,000 போதுமானதாக காணப்படாமையால், நி.பி. 66 இன் மூலம் ரூபா 9,122,300 அதாவது, ஆரம்ப மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 5 சதவீதம் முதல் 720 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டு இருந்தது. | வருடாந்த நிதியேற்பாடு போதுமானதாக இல்லாத இருந்த காரணத்தால் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றல் செய்ய நேர்ந்துள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை துல்லியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்கான அடிப்படை மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடான ரூபா 983,705,000 தொகையில் ரூபா 10,768,300 தொகையானது கழிக்கப்பட்டு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை வீஞ்சி மேலதிக நிதியேற்பாடு நிதி பிரமாணம் 66 இன் கீழ் மாற்றம் செய்ய நேர்ந்திருந்தது. | -மேற்படி- |
| (இ) | 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 824,905,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 388,451,690 தொகை பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அது அந்த செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியை ஏற்பாட்டின் 13 சதவீதத்திலிருந்து 67 சதவீதம் வரையான கருதி கொள்ளக்கூடிய வீச்சினை கொண்டிருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். பட்டியல்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்காத காரணத்தால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | -மேற்படி- |

**2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ITMIS செயற்திட்டத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு கடந்த 3 வருடங்களின் 5 காலாண்டுகளுக்கு செலுத்துவதற்கு நிலுவையாக காணப்பட்ட ரூபா 102,228,904 தொகை 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த பெறுமதி 2023 ஆம் ஆண்டுக்கு உரிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | **ITMIS** கட்டமைப்பின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு செலவினம் காலாண்டு ரீதியாக நிதி முகாமைத்துவ செயற்திறன் செயல்திட்டத்தின் (FMEP) பரிந்துரை மற்றும் அங்கீகாரத்திற்கு இணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகிறது. கடந்த 03 வருடங்களின் 05 காலாண்டுகளுக்கு பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 102,228,903.55 தொகைக்காக FMEP | மீளாய்வாண்டுக்கு உரிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பரிந்துரை பெற்றுக் கொள்ளாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகள் 2023 திசெம்பர் மாதம் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு உரிய கொடுப்பனவு நடவடிக்கைகள் 2023 திசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

## 2.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| உத்தியோகத்தர்களுக்கான முற்பண பி கணக்கின் கீழ் உடன் வழங்கும் போது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதி கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் ஆம் 14:11 பிரிவுகளின் 23 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதிய மாற்றத்திற்கு வழங்கப்பட வேண்டிய இரத்து செய்யப்பட முடியாத உறுதிக்கூற்றொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 626,888 கூட்டுத்தொகையான இடர் கடன் வழங்கும் போது மேற்படி கூற்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். 2024 ஆம் ஆண்டு முதல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் உரிய பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.2. பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரச நிறுவனங்களுக்கு அரச இலத்திரன்கள் பெறுகை கட்டவைப்பை அறிமுகப்படுத்தல் தொடர்பிலான 2018 அக்டோபர் 23 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், அரச பெறுகைகள் நிறுவனத்தின் விலை ஒப்பிட்டு முறையில் பெறுகையினை மேற்கொள்ளும் போது இலத்திரனியில் பெறுகை கட்டமைப்பு பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2023 ஆம் ஆண்டில் 15 சந்தர்ப்பங்களில் ரூபா 8,636,897 கூட்டுத் தொகையான பெறுகை உருப்படிகள் விலை ஒப்பிட்டு முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் திணைக்களத்தினால் இந்த கட்டமைப்பின் ஊடாக கொள்வனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலான 03 பதவிகளும் மூன்றாம் நிலை மட்டத்திலான 04 பதவிகளும் இரண்டாம் நிலை பதவிகள் 09 ஆகியவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 16 இன் ஆல் | இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் சரியானதாகும். | உரிய முறையில் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு |

அதிகரிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 73 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 03 பதவிகளும் மூன்றாம் நிலை மட்டத்திலான 06 பதவிகளும் இரண்டாம் நிலை மட்டத்திலான 11 பதவிகளும் ஆரம்ப நிலை மட்டத்திலான 01 பதவியும் உள்ளடங்களாக 21 வெற்றிடங்கள் நிலவின.

நடவடிக்கை எடுக்க வேண்டும்.